## மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்களில் அதாவது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த ரூபா 741,670 தொகையான 06 வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்பு மீதி பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,117,123 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 3,749,330 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைப் பொறுப்பு ரூபா 632,207 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகையான வருமானம் ரூபா 359,490 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 376,060 என குறிப்பிடப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 16,570 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கேள்வி வாடகை வருமானப் பதிவேட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை வருமானம் ரூபா 849,932 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,434,339 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 584,407 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளாக பதிவு செய்யும் போது ரூபா 20,902,073 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) சபைக்கு சொந்தமான மஹவிலச்சிய மற்றும் அலபத்துவ வாரச்சந்தையிலிருந்து ரூபா 550,130 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்திற்குப் பதிலாக மதிப்பிடப்பட்ட வருமானமான ரூபா 903,700 ஆன தொகை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு ரூபா 391,095 ஆன நிலுவை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை

மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ஆண்டில் நூலகப் புத்தகங்கள் கொள்வனவிற்காக கிடைத்திருந்த ரூபா 128,390 தொகை மீண்டெழும் வருமானம் மற்றும் செலவினமாக கணக்கீடு செய்த காரணத்தினால் மூலதன வருமானம் மற்றும் செலவினம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பி.ச.4 இன் பிரகாரம் 3.81 வருமான தலைப்பின் கீழ் மூலதன பெறுவனவு ரூபா 33,131,142 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 40,570,241 ஆக கணக்கீடு செய்த காரணத்தினால் ரூபா 7,439,099 ஆல் மூலதன வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்குச் சொந்தமான 02 இறைச்சிக் கடைகள், 08 கடைகள் மற்றும் பொருளாதார நிலையத்தினை குத்தகைக்கு வழங்கியமைக்காக ஆண்டில் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 5,168,832 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் அது ரூபா 4,197,200 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 971,632 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கேள்வி ஆதன குத்தகை வருமானம் ரூபா 849,932 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,434,339 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 584,407 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 358,490 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 376,060 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 17,570 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) வடமத்திய மகாண சபையிடமிருந்த மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,398,807 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 3,000,000 என பதிவுசெய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 398,807 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஃ) உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடன்களுக்காக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 309,204 ஆன வட்டி உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் செலவினம் மற்றும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதிய கடன் மீதி அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 3,195,268 ஆக இருந்த போதிலும் அது ரூபா 2,920,215 எனக் காண்பிக்கப்பட்டமையால் அக்கடன் மீதி ரூபா 275,053 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) 2016 ஆம் ஆண்டின் பொறுப்புக்களாக இனங்காணப்படாதிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டிற்குரிய 2017 ஆம் ஆண்டில் செலவினமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 634,730 தொகையில் மீளாய்வாண்டின் செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் ரூபா 1,427,314 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,596,491 எனக் காண்பிக்கப்பட்ட

காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 169,177 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) 2016 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் முன்கொண்டு வரப்பட்ட திரண்ட நிதிய மீதிக்கு 2017 ஆம் ஆண்டிற்குரிய சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் மீதி ரூபா 24,215,305 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 9,650,515 என காண்பிக்கப்பட்டமையால் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 14,564,790 ஆலு் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பி.ச 14 மற்றும் வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்ட செலவு மீதிக்கு இடையே ரூபா 225,739 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 268,126 தொகையான தொங்கல் கணக்கில் வரவு மீதிகள் மீளாய்வாண்டின் எவ்வித சீராக்கமும் இல்லாமல் ரூபா 243,792 பதிவழிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 24,334 என காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 77,538 தொகையான பெறவேண்டிய 02 கடன் மீதிகளை மீளாய்வாண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

வருடக் கணக்காக முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 2,401,391 ஆன 07 செலவு மீதிகளை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 108,834,876 தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.6 இணக்கமிண்மைகள்

#### 1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | | |
| (i) 134(3) ஆம் பிரிவு | | சபை எல்லைக்குள் அமைந்துள்ள நிரந்தர அல்லது நாளாந்தம் விவசாயத்தின் கீழான ஒவ்வொரு காணி ஹெக்டேயரின் மீது ஏக்கர் வரி விதிக்கப்பட்டு அமைச்சரின் அங்கீகாரத்திற்குட்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 177 ஆம் பிரிவு | | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| (i) விதி 5.11 | | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 217 மற்றும் 218 | | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீஎஸ் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1998 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரம் | 505,045 | வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அளவினை விட கட்டணங்கள் மற்றும் வரிகள் அறவிடப்பட்ட 34 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,166,099 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,788,787 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | | 2017.01.01 மீதியில் பெறுகை | 2017 பட்டியலிடப்பட்ட வருமான பெறுகை | |
| | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கழிவுப்பொருள் வரி | 955,850 | 450,000 | 2,600 | 291,550 | 1,111,700 |
| குழாய் கிணறு | 1,069,300 | 65,000 | 3,800 | 11,200 | 1,121,300 |
| நீதிமன்ற தண்டப் பணம் | 1,541,531 | 3,000,000 | - | - | 4,541,531 |
| முத்திரைக் கட்டணம் | 6,944,557 | 3,000,000 | - | - | 9,944,557 |
| வாடகை | 300,568 | 544,882 | 5,160 | 253,430 | 586,860 |
| வாரச்சந்தை | 133,330 | 326,075 | - | 326,075 | 133,330 |
| இறைச்சிக் கடை | 393,855 | 4,197,200 | 82,050 | 3,756,300 | 752,705 |
| மொத்தம் | 11,338,991 | 11,583,157 | 93,610 | 4,638,555 | 18,191,983 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 11,338,991 தொகையான மொத்த நிலுவை வருமானத்தில் 0.8 சதவீதமான ரூபா 93,610 மாத்திரம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட ரூபா 11,583,157 ஆன வருமானத்தில் 40 சதவீதம் அதாவது ரூபா 4,638,555 மாத்திரம் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 11,583,157 தொகையான ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 157 சதவீதம் அளவிலான ரூபா 18,193,983 ஆன நிலுவை வருமானமாக காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் சேரும் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 3,640,264 செலவு செய்யப்பட்டு லோலுகஸ்வெவ பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த பிளிசறு செயற்திட்டம் 2018 மே 20 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேரும் கழிவுப்பொருட்கள் லோல்லுகஸ்வெவ காட்டில் முறையற்ற விதத்தில் விடுவிக்கப்படுவதன் காரணமாக சுற்றாடலுக்கு பாரிய சேதமொன்று இடம்பெறுவது மற்றும் யானை போன்ற விலங்குகள் கழிவுப்பொருட்களை உணவாக உட்கொள்வதால் மிருகங்களின் உயிர்களுக்கு ஆபத்தொன்று காணப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 02 டேலர்கள், 04 சக்கர் உழவு இயந்திரங்கள் 2, கை உழவு இயந்திரமொன்று என்பன 2018 யூன் 13 ஆந் திகதி வரை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான காணப்படும் 17 வாகனங்களுக்கு செல்லுபடியான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் டபே உழவு இயந்திரம் மற்றும் டேலர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

சபைக்கு சொந்தமான கடைகளுக்காக வருடக் கணக்காக ஆதனங்கள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமல் காணப்படும் கட்டணங்கள் அறவிடப்பட்டு இருந்தன.

### 3.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 258 ஏக்கர் அளவிலான 89 மயானங்களின் எல்லைகள் குறிக்கப்பட்டு வேலி இட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபை கட்டிடங்கள் உட்பட சபையின் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த காணி 5 ஏக்கர் 01 ரூட் 23 பேர்ச் அளவிலான 11 விவசாய காணி பிரிவுகள், அளவு குறிப்பிடப்படாத 18 காணிகளின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பெறுமதி குறிப்பிடப்படாத 39 சொத்து விடயங்கள் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் சபை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இச்சொத்துக்களை திருத்தி பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகை

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 168(1) பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 08 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் வருமான விடயமொன்றில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே 162 சதவீதம் வரையான விலகலொன்றும் 7 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையில் 21 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டன.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களைச் செயற்படுத்துதல்**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேட்டுக் கணக்குகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| | (ii) பி.ச அறிக்கை முறையாக பேணப்படாமை |
| | (iii) முன்னைய ஆண்டுகளின் மீதிகளை சீராக்குவதற்கு நாட்குறிப்பு பதிவுகள் இடாமை |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு | (i) உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |
| | (ii) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்படாமை |
| (இ) திட்டமிடல் | செயல் நடவடிக்கை திட்டம், பெறுகை திட்டம் பதவியணியினர் திட்டம் மற்றும உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் | (i) | உடன்படிக்கை நாளதுவரையாக்கப்படாமை |
| | | (ii) | உடன்படிக்கை பிரகாரம் வாடகை மற்றும் கட்டணங்கள் அறவிடப்படாமை |
| | | (iii) | வாடகை செலுத்தாத நிறுவனங்கள் தொடர்பாக உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | நிலையான சொத்துக்கள் | (i) | சகல சொத்துக்களும் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | | (ii) | உரித்து கையேற்கப்படாமை |